பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
22 07 2025 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பாரத சாரண, சாரணியர் மற்றும் வழிகாட்டிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை இன்று வழங்குகிறார்.

- குடியரசு துணைத்தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ள திரு. ஜக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

- பங்குபரிவர்த்தனை வாரியமான செபி அடுத்த மாதம் முதல் தேதியில் இருந்து பங்கு தரகர்களுக்கான ஒருங்கிணைந்த தகவல் தளத்தை ஏற்படுத்தியுள்ளது.

- யுக்ரைன் நாட்டுடன் போர் நிறுத்தத்திற்கான தீர்வை எட்டுவதற்கு தயார் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

- இங்கிலாந்துக்கு எதிரான அடுத்த 2 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலும் காயம் காரணமாக நிதிஷ்குமார் ரெட்டி பங்கேற்கமாட்டார் என்று பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ள திரு. ஜக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

திரு. ஜக்தீப் தங்கர் நேற்று தமது உடல்நலம் கருதி பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் உடல்நலத்தில் கவனம் செலுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கவும், மருத்துவர்களின் ஆலோசனை ஏற்றும் உடனடியாக தாம் ராஜினாமா செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

தமது பதவி காலத்தில் குடியரசுத்தலைவர் அளித்த ஆதரவுக்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் அமைச்சர்களுக்கும் தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாக திரு. ஜக்தீப் தங்கர் அதில் கூறியுள்ளார்.

தாம் பதவி வகித்த காலத்தில் பிரதமரின் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவு அளவிட முடியாதது என்றும், நிறைய விஷயங்களை கற்றுக்கொண்டதாகவும் அதில் அவர் தெரிவித்துள்ளார்.

தவிர நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரின் அன்பு, நம்பிக்கையை தாம் பெற்றிருந்ததாகவும், இது என்றென்றும் தமக்கு நினைவில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மிகப்பெரிய குடியரசு நாட்டில் துணைத்தலைவர் பதவியை வகித்ததன் மூலம் ஏராளமான அனுபவங்களைப் பெற்றதற்காக தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும், நாட்டின் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றத்தில் பங்கு வகித்ததற்காக திருப்தியடைவதாகவும் திரு. ஜக்தீப் தங்கர் அதில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பாரத சாரண, சாரணியர் மற்றும் வழிகாட்டுகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை இன்று வழங்குகிறார்.

சாரண. சாரணியர் இயக்கத்தில் சிறப்பான பங்களிப்பை வழங்குவோருக்கும், அந்த இயக்கத்தின் வழிகாட்டிகளுக்கும் குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் திருமதி திரௌபதி முர்மு சான்றிதழ்களை வழங்கி கௌரவிக்கிறார்.

சாரண, சாரணியர்கள் மற்றும் வழிகாட்டிகளை அங்கீகரிக்கும்கும் வகையில் ஆண்டுதோறும் இந்த சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

<<<<>>>>

மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற உள்ளது.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் நிலையிலும், பிரதமர் வெளிநாடு பயணம் மேற்கொள்ளவிருக்கும் சூழலிலும் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுவது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

<<<<>>>>

ஃபிக்கி சார்பில் நடைபெறும் 3வது உலகளாவிய தொழில் மாநாட்டில் மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று பங்கேற்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளின் தொழில் நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

<<<<>>>>

பங்குபரிவர்த்தனை வாரியமான செபி அடுத்த மாதம் முதல் தேதியில் இருந்து பங்குத் தரகர்களுக்கான ஒருங்கிணைந்த தகவல் தளத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த புதிய நடைமுறை மூலம் ஒரே பரிவர்த்தனையில் 40 அறிக்கைகளை பங்குத் தரகர்கள் சமர்ப்பிக்க முடியும்.

இதன் மூலம் கட்டணம் குறைவதுடன், காகித பயன்பாடும் வெகுவாக குறையும் என்று செபி அறிவித்துள்ளது.

தொழில்நுட்ப அடிப்படையிலான பொதுவான இணையதள சேவையை அறிமுகப்படுத்தும் வகையில் இந்த புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படுவதாக செபி தெரிவித்துள்ளது.

<<<<>>>>

யுக்ரைன் நாட்டுடன் போர் நிறுத்தத்திற்கான தீர்வை எட்டுவதற்கு தயார் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கிரம்ளின் செய்தித்தொடர்பாளர் திரு. டிமிட்ரி பெஸ்கோவ் அளித்த பேட்டியில் ரஷ்யாவின் முக்கிய இலக்கு போர்நிறுத்த நோக்கத்தை எட்டுவதுதான் என்று கூறினார்.

யுக்ரைன் நாட்டுடன் விரைவில் அமைதியான தீர்வை ஏற்படுத்துவதே அதிபர் திரு. விளாடிமிர் புடினின் விருப்பம் என்றும் அவர் கூறினார்.

நேட்டோ அமைப்பில் இருந்து வெளியேறுவது, படைகளை நிறுத்துவது போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து அமைதி ஒப்பந்தங்கள் ஏற்பட வேண்டும் என்று ரஷ்ய அதிகாரிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருவதையும் திரு. டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

<<<<>>>>

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் ஆயிரத்து 200 வாக்காளர்கள் மட்டுமே வாக்களிக்கும் முதல் மாநிலம் என்ற பெருமையை பீஹார் பெற்றுள்ளது.

வாக்குச்சாவடிகளில் நீண்ட வரிசையில் வாக்காளர்கள் காத்திருப்பதை தவிர்க்கும் வகையிலும், வாக்களிப்போருக்கு மேலும் வசதியை ஏற்படுத்தும் வகையிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த இலக்கை அடைவதற்கு பீஹார் மாநிலத்தில் கூடுதலாக 12 ஆயிரத்து 817 வாக்குச்சாவடிகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஒரு வாக்குச்சாவடியில் ஆயிரத்து 500 வாக்காளர்கள் இருந்த நிலையில் தற்போது சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்படி ஆயிரத்து 200ஆக அது குறைக்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் பீஹாரில் மொத்தம் 90 ஆயிரத்து 212 வாக்குச்சாவடிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மும்பை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்று பெய்த கனமழையால் பல்வேறு இடங்களில் தண்ணீர் தேங்கியது.

கொங்கன் பகுதிக்கும், மும்பை, தானே, ராய்காட் உள்ளிட்ட இடங்களுக்கும் இன்று ஆரஞ்சு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதனிடையே நாகாலாந்து மாநிலத்தில் நேற்று பல்வேறு இடங்களிலும் பெய்த கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

<<<<>>>>

தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் பைக்காரா படகு இல்லத்திற்கு வரும் சுற்றுலா வாகனங்களுக்கு ஃபாஸ்டேக் முறையில் கட்டணம் வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பணிகளை மேற்கொள்ள இந்தப் படகு இல்லம் இன்றும், நாளையும் மூடப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான அடுத்த 2 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலும் இந்தியாவின் ஆல்ரவுண்டர் நிதிஷ்குமார் ரெட்டி காயம் காரணமாக விளையாட மாட்டார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

இதேபோல் கைவிரல் காயம் காரணமாக நாளை தொடங்கும் 4வது டெஸ்ட் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப் சிங் பங்கேற்கமாட்டார் என்றும் பி.சி.சி.ஐ தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ள இந்திய அணி, ஏற்கனவே முடிவடைந்த 3 போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற்றுள்ளது.

<<<<>>>>

இந்த ஆண்டு உலகக்கோப்பை செஸ் போட்டிகளை இந்தியா நடத்தவுள்ளது.

இப்போட்டிகள் வரும் அக்டோபர் 30ஆம் தேதி முதல் நவம்பர் 27ஆம் தேதி வரை நடைபெற உள்ளன.

எனினும் இப்போட்டிகள் எந்த நகரில் நடைபெறும் என்பது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று சர்வதேச செஸ் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பிடிக்கும் வீரர்கள் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் பங்கேற்க தகுதி பெறுவார்கள்.

<<<<>>>>

தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் சார்பில் 17 வயதுக்குட்பட்டோருக்கான சாம்பியன் போட்டிகள் வரும் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை கொழும்புவில் நடைபெற உள்ளன.

இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டியில் இந்திய அணி 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இதே பிரிவில் பாகிஸ்தான், பூடான், மாலத்தீவு அணிகளும் இடம்பெற்றுள்ளன.

இலங்கை, பங்களாதேஷ், நேபாள் அணிகள் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ளன.

<<<<>>>>